கொள்கையே பெரிதெனக் கருதினேம்

கொள்கை உயர்வுக்காகவே குணங்களைச் சகித்துக்கொண்டோம்

தலைவர் கொள்கையைக் கைவிட்டார்-நாம் தலைவரைக் கைவிட்டோம்

Phone No. 4502 Regd. No. M. 5458
விலை அரை அணா] [இலங்கை 6 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A. MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (19—10—49) வெளியீடு (20—10—49) [இதழ் 69

தி. மு. கழகத் தோற்றம் ஜனநாயகத்தின் அறிகுறி

—(0)—

திருச்சியில் இரா. நெடுஞ்செழியன்

திருச்சி, அக். 17—

திராவிட முன்னேற்றக் கழகம்-திருச்சி நகரக் கிளையின் துவக்க விழா, திருச்சியில், 'டவுன் ஹாலு'க்கு முன்புறமுள்ள மைதானத்தில், நேற்று மாலை, எழில் உமிழவும், எழுச்சி பொங்கவும், உணர்ச்சி மிகவும், உள்ளம் மகிழவும், திறன் விளங்கவும், தெளிவு பெறவும் ஆன முறையில் மிகச் சிறப்பாக நடந்தேறியது.

மைதானம் முழுவதிலும், அதனை அடுத்த மருங்கிலும், அங்கு இணைந்திருக்கும் அகன்ற வீதியிலும் மக்கள் பெருந்திரளாக நிறைந்திருந்து, துவக்க விழாக் கூட்டத்தைக் கண்டும் கேட்டும் இருந்தார்கள். காரியமாற்றும் கட்டிளங்காளைப் பருவத்தினரும், பெரியோரும், மாணவர்களும், தாய்மார்களும் குழுமியிருந்து, தம் உற்சாகத்தை முகப்பொலிவாலும், புன்முறுவலாலும், பேரொலிச் சிரிப்பாலும், அலையோசையன்ன கையொலிக் குறிப்பினாலும் காட்டியவண்ணம் அமைதியுடன் கூட்டத்திற்கு அழகை ஊட்டினர். திராவிட முன்னேற்றக் கழகத்தின் நோக்கு, சிந்திக்கும் தன்மையுடைய, கொள்கைப் பற்றுகொண்ட கழகத் தோழர்களும், பொதுமக்களும் எத்துணை அளவு ஆர்வத்தை கழகத் துவக்கத்திலேயே நல்குகிறார்கள் என்பதற்கு, அக்கூட்டம் சிறந்த எடுத்துக்காட்டாகவே விளங்கிற்று.

துவக்க விழாச் சொற்பொழிவாற்ற அழைக்கப்பட்டிருந்த தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், எஸ். அப்பாவு ஆகியோர், கூட்டம் நடக்கும் இடத்தை நோக்கிவரும்போது, மலைக்கோட்டைக் கழகத் தோழர்களின் விருப்பத்திற்கிணங்க, தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்களால் மலைக்கோட்டையின் நகர உட்கிளைக் கழகம் திறந்து வைக்கப்பட்டது. தோழர் இரா. நெடுஞ்செழியன் இரு வண்ணக் கொடியின் இலட்சியத்தை விளக்கிக் கூறி, துவக்க விழாவின் அறிகுறியாகக் கழகக் கொடியை, வானில் அசைந்தாடும் வண்ணம் ஏற்றிவைத்தார்.

நகரக் கிளையின் துவக்க விழாக் கூட்டம், மாலை 6-15 மணிக்கு ஆரம்பமாயிற்று. கூட்டம் துவங்குவதற்கு முன் சில தோழர்கள் இன்னிசைப்பாட்டுகள் இசைத்தனர். பின்னர் நகரக்கிளையின் செயலாளர் தோழர் எம். எஸ். மணி, கூட்டத்திற்குத் தலைமையேற்று நடாத்திக்கொடுக்குமாறு நகரசபை உறுப்பினர் தோழர் என். சங்கரன் அவர்களை கேட்டுக்கொண்டார். அவரைத் தோழர் எஸ். மருதைநாயகம் வழிமொழிந்து கூறத், தோழர் என். சங்கரன் தலைவருக்குரிய இடம் சேர்ந்தார்.

முதல் நிகழ்ச்சியாக இறுவன் என். எஸ். அபேதானந்தம் "வளமார் எமது திராவிடநாடு" என்ற திராவிடநாட்டுப்பண்ணை, இனிய குரலால் எடுப்பாக இசைத்தார்.

பின்னர் தலைவர் முன்னுரையாகக் கூட்டத்தின் நோக்கத்தை விளக்கிக் கூறினார்கள்.

ஜி. பராங்குசம்

அடுத்துத் தோழர் ஜி. பராங்குசம் அவர்கள் திராவிடர் கழகத்திலே இருந்த பலர் திராவிட முன்னேற்றக் கழகம் அமைத்துப் பாடுபடவேண்டிய தேவை, எந்தச் சூழ்நிலையின் அடிப்படையாக விளைந்தது என்பது பற்றியும், திராவிடர் கழகத்திற்கும், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் உள்ள வேறுபாடு எந்த வகையில் அமைந்திருக்கிறது என்பது பற்றியும், இரண்டிற்கும் மோதுதல் ஏற்படாவகையில் பாடுபடவே தி. மு. கழகம்செம்மையுற எப்படி திட்டம்தீட்டியிருக்கிறதென்பதுபற்றியும், இந்தப் பிளவை மாற்றுக் கட்சிதோழர்கள் சாதகமாக்கிக் கொள்ள எண்ணுவார்களேயானால் அவர்கள் நிச்சயம் ஏமாறுவார்கள் என்பதுபற்றியும் விளக்கிப் பேசினார்.

எஸ். நெடுமாறன்

பின்பு தோழர் எஸ். நெடுமாறன் திராவிட முன்னேற்றக் கழகம் தூய்மை உள்ளங்கொண்ட, கொள்கைப்பற்றுடையோரின் முயற்சியால் உருவாகியுள்ளது என்றும், திராவிடர் கழகத்தின் தலைமை பிடிவாத மனப்பான்மையுடன் சர்வாதிகாரம் செலுத்துவதோடு, ஜனநாயகமுறைக்கு மாறுபாடாக நடந்து, கொள்கையில் தவறி

[தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க]

பத்தாம் பசலித்தனம் !

குற்றவாளிகளுக்கும் மதிப்பு தரவேண்டும் என்பது ஜனநாயகக் கொள்கை. ஆனால் நமது சென்னை அரசியலாரின் ஆட்சி முறையில் இந்த ஜனநாயகக் கருத்து கூட சிதைக்கப்படுகிறது. விசாரணைக்காக உள்ள கைதிகளைப் பரம்பரைக் குற்றவாளிகளெனக்கருதி அவர்களை அவ்வப்போது போலீஸ் ஸ்டேஷன்களுக்கு வந்து தலைகாட்டி விட்டுப் போகவேண்டும் என்ற பழக்கம் இருந்து வருகிறது. இது தவறு, அருவருக்கத்தக்கது என்று அறிஞர்கள் கருதுகின்றனர். இக் கருத்தை அண்மையில் சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி வ. எஸ். பஞ்சாபிகேச அய்யர் வெளியிட்டிருக்கிறார். வட மலபாரைச் சேர்ந்த ஒரு வழக்கு சம்பந்தமாகத் தீர்ப்புகூறுகையில் அவர் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:—

"விசாரணைக்காக உள்ள கைதிகளைப் பரம்பரைக் குற்றவாளிகளைப்போல் பாவித்து, அவர்கள் அவ்வப்போது போலீஸ் ஸ்டேஷன்களில் வந்து தலைகாட்டவேண்டும்என்று கூறுவது பத்தாம் பசலி முறை என்றே நான் கருதுகிறேன். பூரண சுதந்திரமும், சுயமரியாதையும் அடைந்துள்ள இந்நாளில் இந்திய பிரஜைகளை மரியாதையுடன் நடத்த வேண்டியிருப்பதால் இம்மாதிரியான உத்தரவுகள் உண்மையில் அருவருப்பும் அவமானமுந்தான் ஏற்படுத்துகின்றன" என்று குறிப்பிட்டுள்ளார்.

கையில் பணமுமில்லை, கடன்கொடுப்பாருமில்லை!

ஊழியர் தலையில் கையை வைப்பதே சரி!

சென்னை அரசியலின் பிழைப்பு தேடும் பக்குவம் ?

சென்னை அரசியலார் வருவாய்க்கு வழிதேடும் முறையே ஒரு தனிப்பட்ட முறை! தும்பை விட்டுவாலைப் பிடிப்பது போல் ஆய்ந்தோய்ந்து பாராமல் வீண் செலவுகளுக்கு வழி செய்து விட்டு, வேண்டாத முறையில், மக்களைத் துன்புறுத்தும் முறையில் வரிவசூலிப்பதும்; சில சமயங்களில் அரசாங்க ஊழியர்களின் தலையில் கையை வைப்பதும் ஆன முறைகளால் பொருள் தேடப் பார்க்கின்றனர்.

சென்னை அரசியலாருக்குப்பணம் தேவையாம், வருவாயை விட செலவு அதிகமாக இருக்கின்ற காரணத்தால் பணம், பணம் என்று பரதவிக்கின்றனர். அரசியல் ஊழியர்களின் தலையில் கைவைத்தேனும் காசு பறிக்க வேண்டிய அளவுக்கு அரசியலாரின் பொருளாதார நெருக்கடி வலுத்து விட்டது. மத்திய அரசியலாருக்கு மனுச்செய்து பார்த்து அலுத்துப் போய் விட்டனர் போலும். தங்களால கடன் தர இயலாது என்று கையை விரித்து விட்டனராம், மத்திய அரசியலார்.

ஆகவே வேறு வழி என்ன என்று பார்த்தனர். ஊழியர் தலையில் கையை வைப்பதென முடிவு கட்டி விட்டனர். ஒவ்வொரு ஜில்லாவிலிருந்தும் ஒரு கோடி ரூபாய் திரட்டுவதென்று முடிவு செய்திருப்பதாகவும், இது பற்றிச் சட்ட சபையில் ஒரு மசோதா கொண்டு வரப்படலாம் என்றும் சொல்லப்படுகிறது.

அரசாங்க ஊழியர்களின் சம்பளத்திலிருந்து ஒரு சிறிய தொகையைத் திங்கள் தோறும் கட்டாயமாகப் பிடித்துக்கொண்டு அதனைக் கடனாகப் பயன்படுத்திக் கொள்வதென்றும் திட்டமிட்டிருக்கின்றனராம்.

எப்படி திட்டம்! கையிலோ காசில்லை, கடன்கொடுப்பாருமில்லை. ஆகவே அரசாங்கஊழியர் தலையிலே கை வைப்பதே சரி என்று நினைக்கின்றனர் ஆட்சியாளர். இந்த நிலையில் ஊழியரிடையே உற்சாகத்தை எங்ஙனம் எதிர்பார்க்க முடியும்? சம்பளத்தை உயர்த்தாமலிருந்தாலும் சம்பளத்தில் கையை வைக்காமலாவது இருக்கக் கூடாதா ?

கல்வி வளரக் கொடையளியுங்கள்!

செல்வருக்கு அமைச்சர் காட்டும் வழி

சென்னை அரசாங்க நிதி அமைச்சர், தோழர் கோபால் ரெட்டி, திருவல்லிக்கேணியில் பேசியபோது,

"சென்னை போன்ற நிதிக் குறைவுடைய அரசாங்கத்தின் நிதி அமைச்சராயிருந்துபணியாற்றுவது எனக்கு எளிது. ஏனெனின் நிதிக்குறைவைச் சமாளிக்க மக்கள் மீது புதிய வரிகளைப் போட்டுவிடலாம் ஆனால், வருமானக் குறைவுடைய பள்ளிக்கூடங்களுக்கு இந்த வசதி இல்லை. ஆகையால் பணம் படைத்தவர்கள் தாராளமாகப் பள்ளிக்கூடங்களுக்குப் பொருளுதவி செய்ய முன்வரவேண்டும். செல்வர்கள் கல்வி நிலையங்களுக்கு நன்கொடைகள் வழங்க, இந்திய அரசாங்கத்தாரின் எஸ்டேட் வரி உதவியாக இருக்கும். இந்த வரியை நான் வரவேற்கிறேன். இதனால் மக்களுக்கு ஓர் அனுகூலம் இருக்கிறது. சொத்தில் ஒரு பகுதியை—ஏராளமான தொகைகளை — வரியாக அரசாங்கத்திற்குக் கொடுத்துவிடுவதற்குப் பதிலாக, இவ்வகையில் கல்வி நிலையங்களுக்கு நன்கொடைகள் கொடுத்துதவ தர்மசொத்தாக எழுதிவைக்க முற்படுவார்கள் என்று நான் நம்புகிறேன்"

என்று கூறினார். நிதி அமைச்சரின் இந்தப்பேச்சு கருத்துமிகுந்ததாகும். அரசாங்கத்தில் பணம் குறைந்தால் உடனே பொதுமக்கள் தலைமீது வரிப்பளுவைச் சுமத்திவிடுவது என்னும் முறையை அரசாங்கம் கற்று வைத்திருக்கின்றது என்பதை அவர் தெளிவுபடுத்திவிட்டார் என்பது ஒன்று. மற்றொன்று எஸ்டேட் வரிகளாகப் பணத்தை மத்திய அரசாங்கத்துக்குக் கொட்டிக் கொடுத்துக் கொண்டிருப்பதைவிட, செல்வந்தர்கள் கல்வி நிலையங்கள் ஏற்படுத்தினால், பணம் நல்லவகையில் செலவாகிறதென்னும் திருப்தியுடன் அழியாப்புகழையும் அடைந்து கொள்ளவழி ஏற்படுகிறது என்பதை எடுத்துக்காட்டியது மற்றொன்று. நிதியமைச்சரின் கருத்துப் பொதிந்த இந்தப் பேச்சு செல்வர்களுக்கு விழிப்பூட்டும் என்று நம்புகிறோம்.

ஓர வஞ்சனை

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, மக்களுக்காக ஆட்சிபுரியும் காங்கிரஸ் ஆட்சியாளர், தங்களுடைய ஆட்சி முறை, ஜாதி, மதங்களையெல்லாம் கடந்த மதச்சார்பற்ற முறை என்று அடிக்கடி சொல்லுகின்றனர். ஆனால் அவர்களுடைய சொல்லுக்கும் செயலுக்கும் ஒற்றுமை இருப்பதேயில்லை. அவர்களையும் அறியாமல் இந்து மதப்பற்று ஆட்சியாளர் உள்ளத்தில் குடிபுகுந்து விடுகிறது. ரா. சு. சே. சங்கம் என்றால் இனிக்கிறது. அதற்கு ஆதரவு தரகை நீளுகிறது. ஆனால் அதே நோக்கில் தாழ்த்தப்பட்டோர் நலங்கருதி ஏதேனும் செய்ய எண்ணம் தோன்றுவதில்லை. இதனைத் தாழ்த்தப்பட்டோர் சங்கத் தலைவர் தோழர் ராஜபோஜ் தெளிவாகச் சுட்டிக்காட்டி "ஏன் இந்த ஓரவஞ்சனை!" என்று கேட்கிறார்.

"நம் அகில இந்திய ஷெடியூல்ட் வகுப்பினர் பெடரேஷனின் தொண்டர்படை ஸ்தாபனமாகிய சைனிக தளத்தின் மீதுள்ள தடையை சர்க்கார் நீக்காதிருக்கும்போது, ஆர். எஸ். எஸ். காரர்கள் மீதிருக்கும் தடையை நீக்கி விட்டதோடல்லாமல் காங்கிரஸில் சேரலாமென்றும் சர்க்கார் செய்திருக்கிறது."

மாலை மணி

சென்னை 19—10—49 புதன்கிழமை

மகிழ்கிறோம்! :: :: பாராட்டுகிறோம்!

“எழுச்சி கொண்டோம், ஏற்றம் பெற்றோம்” என்ற முழங்கோசையைத், திராவிடத்தின் திக்கெட்டும் பரவி நின்று, சென்ற மூன்று நாட்களாக எழுப்பி வருகின்றனர், கழகத் தோழர்கள். திராவிட முன்னேற்றக் கழகக் கிளைகள் முகிழ்த்துக் குலுங்கத் தொடங்கிவிட்டன! மகிழ்கிறோம், பாராட்டுகிறோம்!

மாவட்டங்களின் தலைநகர்களிலும், பிற பெரு நகரங்களிலும் துவக்கவிழாக் கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன. எங்கணும் மக்களின் ஆர்வமும், ஆதரவும் திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆரத் தழுவி, அன்பு காட்டி, அகமகிழ்வு கொடுக்கின்றன என்ற செய்திகள், ‘இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே’ என்ற முறையில் நம்மை எட்டுகின்றன.

உண்மை—நீதி—நேர்மை என்ற அடிப்படைகளின்மீது அமைக்கும் பாதையே, மக்கள் முன்னேறிச் செல்ல எப்பொழுதும் ஏற்றதாக இருக்கும் என்பதற்கு, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இயக்கப் பற்றுடையோரும், பொது மக்களும், ஆராய்ந்தறியும் திறனுடையோரும் ஆங்காங்கு கொடுக்கும் நிறைந்த ஆதரவே போதுமான எடுத்துக்காட்டாகும்.

செல்லுமிடங்களிலெல்லாம், கொள்கைப் பற்றுடையோர் பெரும்பாலோராக நின்று, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஆதரவு தருகிறார்கள் என்றால், கொள்கையிலே நாம் கொண்டிருக்கும் பற்று—நேர்மையிலே கொண்டிருக்கும் நம்பிக்கை—நீதிக்குக் காட்டும் மதிப்பு—உள்ளத்திலே ஊற்றெடுக்கவிடும் பழுதிலா ஆர்வம் — சொற்களிலே காட்டும் கண்ணியம் — போக்கிலே காட்டும் தூய்மை ஆகிய இவையே அதற்குக் காரணமாகும்.

கூட்டங்களில் கலந்து கொள்ளும் சொற்பொழிவாளர்களும், கூட்டங்களைக் கூட்டுவிக்கும் அமைப்பாளர்களும் அடக்கத்துடனும், பெருந்தன்மையுடனும், எத்தகைய இடுக்கண்கள் வந்தாலும் சகித்துக்கொள்ளும் பண்புடனும் நடந்துகொண்டுவருவது மிகமிகப் போற்றுவதற்குரியதாகும். திராவிட முன்னேற்றக் கழகம் நாட்டில் நடமாடவொட்டாதபடி செய்ய, தங்களை மாற்றார்கள் என்று கருதிக்கொண்டிருப்போர், எவ்வளவு இழிவான முறைகளைக் கையாண்டபோதிலும், அவை அனைத்தையும், பொறுமையுடனும், அமைதியுடனும், ஒழுங்கான கட்டுப்பாடுடனும் ஏற்று நின்று இலட்சிய நிறைவேற்றமே குறிக்கோள் என்பதைக் காட்டவேண்டும். சில்லறை விஷயங்களில் இழிவான முறையில் இறங்கிவிடாமல், தன்னிலை தாழாத பண்புடையோரே, திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்து நிற்கிறார்கள் என்பதில் நமக்குச் சிறிதும் ஐயமில்லை.

கூட்டம் நடக்கவொட்டாமற் செய்ய பல இழிந்தமுறைகள் கையாளப்படலாம், அது கண்டு அஞ்சாமல், நேரிய வழியில் செயலாற்றிச் செல்வதே முறையாகும். கற்கள் விழக்கூடும், தாங்கிக்கொண்டு எறிவோரின் அறியாமை கண்டு நகைக்க வேண்டும். அடிவிழுந்தால் பட்டுக்கொண்டு, குருதியின் சொட்டுக்களை இலட்சிய நிறைவேற்றத்துக்காகச் சொட்டிய சொட்டுக்களாகக் கொள்ள வேண்டும். காங்கிரஸ்காரர்களும், வைதிகர்களும் முன்பெல்லாம் கடைப்பிடிக்கும் முறையைக் கையாண்டு, அதிகாரிகளைக் அதிகாரிகளைக் கெஞ்சிக் கேட்டு, தடையுத்திரவுகளைப் போடச்செய்து, கூட்டம் நடக்கவொட்டாமல் செய்துவிடுவர் சில கயமைக் குணம் படைத்தோர். அப்படிப்பட்ட இடங்களில் பொறுத்திருப்போம். உண்மைக்கு—நேர்மைக்கு அழிவுகிடையாது, என்றாவது ஒரு நாள் அவை முழு வெற்றிபெற்றேதீரும் என்ற மன ஆறுதலுடன்.

நம்மீது பொறாமைக் குணம் கொண்டிருப்போர் மட்டுமல்லாமல், நமது முற்போக்குக் கொள்கையைக்கண்டு, அஞ்சும் காங்கிரஸ் அரசாங்கமும் எப்படியாவது நம்மை அடக்கி ஒடுக்கிவிட எண்ணிக்கொண்டிருக்கிறது.

விழுப்புரத்தில் திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டத்திற்குத் தடையுத்தரவு விதிக்கப்பட்டிருக்கிறது. உத்தரவை ஊன்றிப் பார்த்தால், உடுமலையில் பெரியார் கூட்டம் நடைபெறுமற் செய்ய காங்கிரஸ்காரர்கள் எந்த முறையைப் பின்பற்றினார்களோ, அதே முறைதான் விழுப்புரத்திலும் கையாளப்பட்டிருக்கிறது, சிலரால். “எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள்காண்பதறிவு” என்று கூறிவந்த கொள்கை எங்கே! கூட்டத்திற்குத் தடையுத்தரவு கேட்டு வாங்கும் முறை எங்கே! இழிவு! மிக மிக இழிவான செயல்! என்றாலும் செய்யத் துணிந்துவிட்டார்கள் ஏமாற்றத்தின் விளைவால்.

இத்தகைய இழிவான செயல்களில், திராவிட முன்னேற்றக் கழகத்தார் என்றும் எங்கும் இறங்கக்கூடாது; இறங்கமாட்டார்கள் என்பது மட்டும் உறுதி.

திராவிட முன்னேற்றக் கழகத் துவக்கவிழாக்கள் இன்னும் எத்துணையோ ஊர்களில் ஆற்றப்பட வேண்டியிருக்கின்றன. கிளைகள் அமையாத ஊர்களில் கிளைக் கழகங்களைக் காணுங்கள்; துவக்கவிழாவை விரைவில் கொண்டாடுங்கள்!

துவக்கவிழாக்களைத் திறம்பட, சிறப்பாக நடத்திய—இனி நடத்தும் தோழர்கள் அனைவரையும் பாராட்டுகிறோம்! அவர்கள் பெருமுயற்சி கண்டு மகிழ்கிறோம்!

தாய்மொழித் தமிழுக்கு ஆக்கந் தேடுவது தவறு?

ஆங்கிலக் கலப்பு அடிமைச் சின்னம் ஆனால் வடமொழிக் கலப்பு?

மொழிப்பற்று தேவை என்பதை அறியாரா அமைச்சர்!

“தமிழ் வளர வேண்டுமானால் சமஸ்கிருத சப்தத்தை—சமஸ்கிருத மொழிகளை உபயோகிக்கக் கூடாதென்று கூறப்படுவதன் பொருள் எனக்குப் புரியவில்லை. ‘கிருஷ்ணன்’ என்பதைக் ‘கிருட்டினன்’ என்று கூற வேண்டுமென்றார் ஒரு பெரியவர். பாலசுந்தரம் என்பதை இளைய அழகர் என்றும், வேதாசலம் என்பதை மறைமலை என்றும் மாற்ற வேண்டும் என்கிறார்கள் சிலர். தமிழ் அறிஞர்கள் சிலர் இவ்வாறுகூறுவது எனக்குப் புரியவில்லை”

என்று கல்வி அமைச்சர் திரு மாதவமேனன் தம் கோவைச் சுற்றுப் பிரயாணத்தின்போது கூறினார்.

அதே பகுதியில் ஆங்கில மொழிக் கலப்பு அடிமைத்தனத்தின் சின்னம் என்று அதே கல்வியமைச்சர் கூறினார்.

ஆங்கில மொழிக்கலப்பு அடிமைச் சின்னமானால், சமஸ்கிருத மொழிக் கலப்பும் அவ்வாறேயாகும் என்பது கல்வித்துறை அமைச்சருக்குப் புரியாமலிருக்கிறது.

ஒரு மொழி தன்னளவில் இயங்கும் வல்லமையுடனிருக்கையில், அதில் பிற மொழிகளை வலிந்து புகுத்து வைப்பது கட்டாய ஆக்ரமிப்பு, பலாத்கார அடக்கு முறை என்று கூறாமல் வேறு என்னவென்று கூறுவது!

தமிழ் நாட்டிலே. இன்றுள்ள அவ்வளவு சமஸ்கிருத ஊர்ப்பெயர்களும் தமிழ்ப் பெயர்களிலிருந்து எவ்வாறு சமஸ்கிருதமாயின? அவற்றிற்குத் தமிழில் பெயர்களே இடாமலிருந்தார்களா? இன்று சமஸ்கிருதமாக வழங்கும் சொற்களுக்குப் பதில் முன்னர்த் தமிழில் வழங்கப்பட்ட சொற்களின் கதி என்னவாயிற்று? அவற்றிற்கெல்லாம் தமிழில் சொற்களே இல்லையா?

இவ்வாறு தமிழ்ச் சொற்களும், ஊர்ப்பெயர்களும் சமஸ்கிருதமாக மாறிப்போனதன் காரணம் என்னவென்பதைக் கல்வி மந்திரி அறியாதிருந்தால், ஆராய்ச்சி செய்யாதிருந்தால், அறிந்தவர்களிடம், ஆராய்ந்தவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளாமலிருந்தால், சமஸ்கிருதப் பெயர்களை மாற்றித் தமிழ்ப் பெயர்களாக வைப்பதற்குரிய பொருள் அவருக்கு எப்படிப்புரிந்துவிடும். புரியாதுதான். புரிந்து கொள்ள முடியாதுதான்.

மக்களிடையே, கிராம மக்களிடையே பேச்சு வழக்கில் காணப்படும் தமிழ்ச் சொற்கள் கூட்டிப் படித்தவர்களுடைய பேச்சு வழக்கில் சமஸ்கிருதமாகி விட்டிருக்கின்றனவே. எனவே, தமிழ்ச்சொற்களைச் சன்னம்சன்னமாகக்கொன்று அவைகளுக்குப் பதில் சமஸ்கிருதச் சொற்களைச் சேர்த்து வந்து தமிழைக் கொலை செய்து விடவேண்டும் என்னும் தீய சதிஎண்ணம்தான் தமிழில் சமஸ்கிருதவார்த்தைகளைப் புகுத்துவதும், சமஸ்கிருதப் பெயர்களைத் தமிழ்நாட்டில் வைப்பதுமான முயற்சி ஆகும் என்பதைக் கல்வியமைச்சர் புரிந்துகொள்ள வேண்டும்.

இளவழகன், மறைமலை, இளங்கோ போன்ற தமிழ்ப் பெயர்களிருக்க அவற்றைச் சமஸ்கிருதத்தில் உச்சரிப்பானேன் என்பதைக்கல்வியமைச்சர் சிந்தித்துப் பார்த்துப் புரிந்து கொள்ளவேண்டும். புள்ளிருக்கு வேளூர் என்ற பெயர் நாயன்மார்கள் வாயால் பாடப்பட்டிருக்க. அறுவைத்தீஸ்வரன் கோயிலாக மாறியதேன் என்பதைகல்வியமைச்சர் புரிந்துகொள்ள வேண்டும். இவ்வாறு ஒன்றல்ல இரண்டல்ல. பல சான்றுகள் உள. கல்வியமைச்சர் சிந்தனைக்கு. ஆனால் சிந்திக்க மனத்தெளிவு வேண்டும். நடுநிலை வேண்டும். சமஸ்கிருதமோகத்தில் ஆழ்ந்துவிட்டால் நல்ல தீர்ப்பு கிடைக்க முடியுமா?

தமிழ்மொழியை. சமஸ்கிருதக் கலப்பிலிருந்து பிரித்து தூய தமிழாக்க வேண்டுமென்பதோ, சமஸ்கிருதமாக மாற்றப்பட்டுவிட்ட தமிழ்ப்பெயர்களை மீண்டும் பழைய தமிழ்ப் பெயர்களாகவே ஆக்கிவிடவேண்டுமென்பதோ, சமஸ்கிருதத்துக்குத் துரோகம் இழைப்பதாகாது; சமஸ்கிருதத்தை வெறுப்பதாகாது என்பதைக் கல்வியமைச்சர் அறிவாரா? டிராங்குபார் தரங்கம்பாடியாகவும், டின்னவெல்லி திருநெல்வேலியாகவும், கொயிலான் கொல்லமாகவும், ட்ரவாண்ட்ரம் திருவனந்தபுரமாகவும் மாற்றப்படுவது ஆங்கில மொழித் துவேஷத்தினாலா? வெறுப்பினாலா? அவற்றின் பழைய பெயர்கள் நிலைத்திருக்க வேண்டும் என்ற அவா எவருக்கு ஏற்படாது!

நாம் லத்தீன் மொழி பயின்றால், கிரேக்கமொழி பயின்றால், நம்முடைய மொழியையும், நடையுடை பாவனை எல்லாவற்றையும், நம்முடைய பெயர்களையும் அம்மொழிகளிலேயே மாற்றிக்கொள்ள வேண்டுமோ? அப்படியே அம்மொழி பயிற்றிய ஆசிரியர்கள் தூண்டுதலாலோ, அப்போது அம்மொழிகளில் ஏற்பட்ட மோகத்தாலோ ஒருவன் தன்பெயரையும் பிறவற்றையும் அம்மொழிகளுக்கிணங்க மாற்றிக் கொண்டிருந்தாலும், பின்னர் அறிவு வரப்பெற்று, பழையபடி தாய் மொழியில் திருத்திக் கொள்வது குற்றமாகுமா! அம் மொழிகளை வெறுப்பதாகுமா?

எனவே, கல்வியமைச்சர் உண்மையிலேயே புரிந்துகொள்ள நாடினால், புரிந்துகொள்ள விரும்பினால், தமிழ் அறிஞர்களே, தமிழ்ப் பெரியவர்களே தங்கள் பெயர்களைத் தமிழில் மாற்றுவதன் கருத்தறிய நாடினால், தக்கார் வாய் மூலம் கேட்டு இது தாய் மொழிப்பற்று, தாய் நாட்டுப் பற்று, உண்மையான தேசபக்தி என்பதல்லாமல் வேறு ஒன்றுமில்லை என்பதை அறிந்து கொள்வாராக

விழுப்புரத்தில் தி. மு. கழகக் கூட்டத்திற்குத் தடை

ஆதரவாளரின் அரும் முயற்சி!

விழுப்புரம், அக். 17—

15—10—49 முதல் இரண்டு மாத காலத்திற்குத் தி. மு. கழகக் கூட்டங்களுக்கும், இரயில்வே லேபர் யூனியன், கம்யூனிஸ்ட் கட்சி கூட்டங்களுக்கும் 144 தடை யுத்தரவு சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

விழுப்புரம் ஸ்டேஷனரி இரண்டாவது வகுப்பு மாஜிஸ்ட்ரேட். தமது தடையுத்தரவில், “ஸ்ரீ அண்ணாதுரையின் ஆதரவாளர்களால் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கூட்டம் ஒன்று 19—10—49ல் கீழ்ப்பெரும்பாக்கத்தில் நடைபெறப் போவதாக அறிவிக்கப்பட்டேன். ஸ்ரீ ஈ. வெ. ராமசாமி நாய்க்கரின் ஆதரவாளர்கள் இந்தக் கூட்டத்தை எதிர்க்கிறார்கள் என்றும் அறிவிக்கப்பட்டேன், மேற்கண்டபடி கூட்டம் நடைபெறுமானால், இரு கட்சியாரிடத்திலும், பொது மக்களிடத்திலும் மனக்கசப்பு ஏற்படும் என்றும் அறிவிக்கப்பட்டேன். நகரின் அமைதிக்கும், பொது மக்கள் பாதுகாப்புக்கும் பங்கம் விளையும் என்று கருதி; இ. பி. கோ. 144வது பிரிவின்படி திராவிட முன்னேற்றக் கழகம், இரயில்வே லேபர் யூனியன், கம்யூனிஸ்ட் பார்டி ஆகியவைகளைச் சேர்ந்தவர்களும் அனுதாபிகளும் கூட்டம் கூட்டுவது, ஊர்வலம் நடத்துவது; ஒலிபெருக்கி மூலமாகவும், மைக்ரோபோன் மூலமாகவும் செய்திபரப்புவது துண்டுவெளியீடுகள் வெளியிடுவது. மேற்கண்ட கட்சிகளைச் சேர்ந்தோர் ஐந்து பேர்களுக்குமேல் கூடுவது. ஆயுதங்களை ஏந்திச் செல்வது ஆகிய நடவடிக்கைகளிலிருந்து விழுப்புரம் தாலுக்காவிலும், விழுப்புரம் நகரிலும் இரண்டு மாத காலத்திற்குத் தடைப்படுத்தப்படுகிறார்கள்.” என்று குறிப்பிட்டுள்ளார்.

தி. முன்னேற்றக் கழகக் கூட்டம் நடைபெற்று மக்களுக்குத் தெளிவு ஏற்படுத்திவிடக்கூடாது என்று கருதி, பெரியாரின் ஆதரவாளராக இருந்துவரும் தோழர் டாக்டர் தியாகராசன் அவர்கள், பல ஊர்களில் தேசிய தோழர்கள் கடைப்பிடிக்கும் முறையைக் கொண்டு, போலீசாரை அண்டி, இந்த ‘நாட்டுச் சேவை’ கைங்கரியத்தைச் செய்ததன் பேரிலேயே தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

திராவிடர் கழகக் கூட்டத்திற்கு எவ்வித தடையும் விதிக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

(ந. நிருபர்)

திக்கெட்டும் தி. மு. கழகத் திறப்புவிழா

எங்கும் ஆதரவு: எங்கும் எழுச்சி

கழகத்தோழர்களின் பெருமுழக்கம்

வேலூர் (வ. ஆ)

வேலூர், அக். 17—

16-10-49ல் வேலூர் கோட்டை வெளியில் மின்சார விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட அழகானபந்தல் அமைத்து சுமார் 20 ஆயிர மக்கள் கொண்ட கூட்டத்துக்கிடையில், ஆரணி திராவிட முன்னேற்றக் கழக துணைச் செயலாளர் தோழர் இராமகிருஷ்ணன் அவர்கள் தலைமையில் விழா வெகு சிறப்பாக துவக்கப்பட்டது.

கே. ஏ. மதியழகன்

தோழர் கே. ஏ. மதியழகன் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றுவதற்கு ஏற்பட்ட காரணங்களையும், அரசியல் சம்மந்தமாக இந்திய யூனியன் தலைவர் நேரு அவர்கள் அமெரிக்க குடியரசு காங்கிரசில் பேசும்போது குறிப்பிட்ட எழுத்துரிமைபேச்சுரிமை, பிரசா உரிமை ஆகியவைகளுக்கும், நேரு பிறந்த, நேருவால் ஆளப்படுகிற நாட்டில், நேரு சர்க்காரால் வீசப் படுகிற அடக்குமுறை பாணங்களுக்கும், ஜாமீன், பறிமுதல் போன்ற நடவடிக்கைகளுக்கும் எவ்வளவு வேறுமைகள் உண்டென்பதையும், பண மன்னர்களை நம்பிவாழும் பாசிசப் போக்குக்கொண்ட சியாங் கின் ஆட்சி மண்ணைக்கவ்வி, மக்களை நம்பி வாழ்ந்த மாசிடாங் ஆட்சி மலர்ந்து; மக்கள் அணுவுகளை சிந்திய செந்நீரால் தோய்த்தெடுக்கப்பட்ட செங்கொடி சீனத்தின் விண்முட்ட பறப்பதையும், பண மூட்டைகளால் தாங்கிப்படிக்கப் பட்ட ஷியாங் பர்மோசா தீவில் பதுங்குமிடம் தேடுவதையும் விளக்கி சுமார் 1½மணி நேரம் பேசினார்.

சி. பி. சிற்றரசு.

பிறகு தோழர் சிற்றரசு திராவிட முன்னேற்றக்கழகம் தோன்றுவதற்குக்காரணம் கட்சியிலிருந்த தோழர்களே, அண்ணா அவர்கள் அல்லவென்றும், வேலூர்தான் அதற்குக் காரணமென்றும் ஆனால் பிற மாவட்டத்தாரும், தலைவரும் நினைப்பதைப்போல் அமோகமான ஆதரவு திருமணத்திற்கு வட ஆற்காடு மாவட்டத்தில் இருப்பதாக பொய் கணக்குப்போட்டுக்கொண்டு புன்சிரிப்பு சிரித்துக் கொண்டிருப்பவர்கள் இந்தக்காட்சியைக் கண்டாவது கருத்தில் திருந்துவார்கள் என்று நம்புவதாகவும், பெண் குலத்தை ஏசுகிற பேயர்கள் நாங்கள் அல்லவென்றும், அதனால் மணியம்மையாருக்குப் பெரியார் சொல்லுவதைப் போல அறிவு இருக்கின்றது என்று நாங்களும் நம்புகிறோம்; ஆனால், அறிஞர் அண்ணாவின் அறிவு, பேச்சாளர்கள் 49 பேருடைய அறிவு, உறுப்பினர்கள் அனைவருடைய அறிவும் 500க்கு மேற்பட்ட கழக உறுப்பினர்கள அறிவெல்லாம் எதிரிகளால் சூறையாடப்பட்டான பிறகு வேண்டுமானால், இந்த மணியம்மையாகிய 'அறிவுப் பொக்கிடத்தில் இருந்து 'எடுத்துக் கொள்ளலாம்' என்று கருதிவாளாயிருந்தோமே தவிர, வேறொன்றுமில்லையென்றும், முன்னேற்றக் கழகத்தின் எதிர்கால வேலைகள் ஆகியவைகளைப்பற்றியும் அண்மையில் மாவட்ட தேர்தல் சம்மந்தமாகவும் பேசி, சரியாக இரவு 9 மணிக்கு நன்றிகூற, கூட்டம் இனிது முடிந்தது.

திருச்செங்கோடு

திருச்செங்கோடு, அக். 16—

16—10—49 ஞாயிறு காலை 8-மணிக்கு மிகக் குதூகலமான முறையில் ஊர்வலத்துடன் துவக்க விழா ஆரம்பமாயிற்று. நகரமுக்கிய தெருக்கள்வழியாக ஊர்வலம் புறப்பட்டு, சரியாக 10 மணிக்கு 40 கால் மண்டப மைதானத்தை அடைந்தது. அங்கு தோழர் டி ஜி. கணபதிபொதுச் செயலாளர் அவர்களால் கொடி ஏற்றுவைக்கப் பட்டது. பின், மாலை 6 மணிக்கு 40 கால் மண்டபத்தின் முன் துவக்கவிழாப் பொதுக் கூட்டம் ஆரம்பமாயிற்று. ஏராளமானபொது மக்களும் இயக்கத் தோழர்களும் குழுமி இருந்தனர். கூட்டத்திற்கு தோழர் என். கே. பி. வேல் அவர்கள் தலைமைவகித்தார். தலைவர் முன்னுரையில் திராவிட முன்னேற்றக்கழக அமைப்புமுறைகளைப்பற்றியும், அதற்கு எதிராக நடந்துவரும் பொருந்தாக் கூற்றுகளையும் விளக்கிப் பேசினர். பின் தோழர் எ. சித்தையன் அவர்கள் கைத்தறி நெசவாளர்கள் துயரத்தையும், இன்றைய அரசியலார் போக்கு பற்றியும் எடுத்துரைத்தார். அடுத்தபடியாக அருப்புகோட்டை தோழர் எம். எஸ், இராமசாமி அவர்கள் இந்தி நுழைவு பற்றியும், ஆரிய பண்டிகையான தீபாவளியைப் பற்றியும் விரிவாக பேசினர். கடைசியாக தோழர் கோபி. ஜி. என். இராசு அவர்கள் திராவிட முன்னேறறக் கழகத்திற்கும் திராவிட கழகத்திற்கும எந்தவிதமான மோதுதல் முரண்பாடு கிடையாது என்றும் பெரியார் என்றும் பிறரென்றும் இரு கட்சிகள் உண்டாகி விட்டன. இவை இரண்டையும் மோதவிட்டு வேடிக்கைப் பார்க்கலாம்என்று நினைபபவர்கள் நிச்சயம் ஏமாற்றமடைவார்கள் என்றும், திராவிட முன்னேற்றக் கழகம் இந்நாட்டு பாட்டாளி மக்களின் பாசறையாகப் போகிறது என்றும மற்றும் விளக்கமான சொற்பொழிவுக்குப்பின் தலைவர் பின்னுரையுடன் செயளாலர் நன்றி கூறலுடன் "திராவிட நாடு திராவிடருக்கே!" 'தமிழ் வாழ்க' 'திராவிட முன்னேறறக்கழகம் வாழ்க!' என்ற முழக்கத்துடன் கூட்டம இனிது முடிந்தது. என்று வி. செயலாளர் என். பி. சதாசிவம் அறிவிககிறார்.

திண்டுக்கல்

திண்டுக்கல், அக். 17—

இன்று மாலை 5மணிக்கு, இவ்வூர் மாரியம்மன் திடலில் திராவிடமுன்னேற்றக்கழக துவக்க விழா ஆரம்பமாயிற்று. விழாவிற்குப் பல ஆயிரக் கணக்கான மக்கள் கூடி இருந்தார்கள், நகரதிராவிடமுன்னேற்றக்கழகசெயலாளர், என். முத்து தலைமை வகித்தார்.

இரா. துரைராசன் திராவிட முன்னேற்றக் கழகக கொடியை ஏற்றிவைத்து கொடியின் தத்துவம், இன்றைய காங்கிரஸ் நிலை ஆகிய பொருள்பற்றி விளக்கமாகப் பேசினார். அடுத்தபடியாகக் குடந்தை, எஸ். கே. சாமி, தூத்துக்குடி தங்கப்பழம், ஆகியோர், என் இன்று, திராவிட முன்னேற்றக்கழகம் துவக்கப்படுகிறதுஎன்பதையும்; இன்றைய திராவிட சமுதாயத்தின் நிலை; திராவிடநாடு பிரிவினை, இன்னும் பல விஷயங்கள் பற்றியும் கூறி முடித்த பிறகு, தலைவர் முடிவுரைவில, நன்றி கூறலோடு கூட்டம் 9½ மணிக்கு இனிதுமுடிந்தது.

கூட்டத்தில், S. K. சாமி பேசும் பொழுது, அடிக்கடி பொது மக்களின் கைதட்டுதல் வானளாவியது. எங்கு பார்த்தாலும், திராவிட முன்னேற்றக் கழகப்பேச்சாகவே இருக்கிறது. என்று செயலாளர் என். முத்து அறிவிக்கிறார்.

நாகபபட்டினம்

நாகப்பட்டினம, அக். 17—

துவக்கவிழா நாகை நீலாதெருகு வீதி கழகக் கட்டிடத்தில், நேற்று மாலை 6-மணிககு நடைபெற்றது அவ்வமயம் தி. மு. கழகக் கொடியேற்றுவிழா நடைபெற்றது. 7 மணிக்கு கழகக் கட்டிடததில் தோழர் வி. டி. ராஜன் அவர்கள் தலைமையில், பொதுக்கூட்டம் சிறப்பாக துவங்கியது. தலைவர் முன்னுரைக்கு பின்னர், தோழர் சோ. இராதாமணாளன் கழகத்தைத் திறந்துவைத்துச் சொற்பொழி வாற்றினர். தோழர் பெருமாள் கழகத்தின் நோக்கத்தை விளக்கிப் பேசியபின்னர், செயலாளர் நன்றி கூறலுடன் கூட்டம் இரவு 8-30 மணிக்கு இனிது முடிவுற்றது. என செயலாளர் அறிவிக்கிறார்.

அம்மன் கோவில்

அம்மன்கோவில், அக். 17—

நேற்று இரவு 8 மணிக்கு எட்டயபுரம், திராவிட முன்னேற்றக் கழக ஆரம்ப விழா பொதுக்கூட்டம், நடுவிற்பட்டி; பட்டத்து விநாயகர் கோவில் மைதானத்தில் நடந்தது. தோழர் மே, க. முத்து தலைமை தாங்கினர். திராவிட நாடு பிரிக்க வேண்டியதன் அவசியம் பற்றியும், பெரியார் திருமணத்தால் நேர்ந்தது என்ன? என்பது பற்றியும் தோழர்கள்:-மு. வெற்றிவேல், தி. ராமசாமி, சு. கலிங்கன் ஆகியவர்கள் பேசினர்கள். செயலாளர் நன்றிகூற, கூட்டம் முடிவுற்றது. என தோழர் எம். வெற்றிவேல் அறிவிக்கிறார்.

சங்நாசி நல்லூர்

சங்நாசி நல்லூர், அக். 16—

இன்று இரவு 8 மணிக்கு இவ் ஊரில் திராவிட முன்னேற்றக்கழகத்துவக்க விழா, எஸ். ஆர். சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் மிகச்சிறப்பாக நடந்தது. இரவு 7½ மணிக்கு கழகத்தோழர்களின் ஊர்வலம் ஒன்று புறப்பட்டு கூட்டம் நடக்குமிடத்திற்கு வந்தது. கழகத் தோழர்களும், பொது மக்களும ஏராளமாக குழுமி இருந்தார்கள்.

சிறுவன் இரா. இளஞ்செழியன் தமிழ்த்தாய் வாழ்த்து பாடினர். செயலாளர் அறிக்கைப்படித்தபின், தலைவர் தனது முன்னுரையில் "திராவட முன்னேற்றக் கழகம்" —கிளைஎன் அமைக்கப்படவேண்டும் என்பதுபற்றி விளக்கமாகப் பேசியதுடன், பெரியாரின் செய்கைக்காக வருந்துவதாகவும் குறிப்பிட்டார்.

அடுத்தபடியாக, தோழர் வே. தமிழரசன் அவர்கள் கொடியேற்றிவிட்டு அதன் இலட்சியத்தைப்பறறியும் குறிப்பிட்டார். கழகத்தின் நிலையை அழகிய தமிழ் நடையில் மக்களுக்கு உணர்ச்சி யூட்டும் வண்ணம் தெளிவாகச் சொற்பொழிவு ஆற்றினர்.

தலைவர் தனது முடிவுரையில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் திட்டஙகள், அமைப்பு முறைகள் இவைகளைப்பற்றி விவரமாக குறிப்பிட்டதுடன் "திராவிட நாடு திராவிடருக்கே" என்ற இலட்சியத்தை நன்கு விளக்கினர்.

செயலாளர் நன்றி கூற கூட்டம் இனிது முடிந்தது. இவ்வூரில் கழகத்தோழர்களும் பொதுமக்களும் என்றுமிலா உற்சாகமுடனும், மகிழ்ச்சியோடும காணப்படுகின்றனர். என்று விளம்பர உறுப்பினர் இரா-அரங்கசாமி எழுதுகிறார்.

"மாலை மணி"

20—10—49 முதல்

அதிகப் பக்கங்களோடு வெளிவரும்

விலை அணா ஒன்று

ஏஜண்டுகளுக்கு;— "மாலை மணி" ஏஜண்டுகள் 20—10—49 (சென்னை) 21—10—49 (வெளியூர்) முதல் "மாலை மணி" பிரதி ஒன்று, ஒரு அணா வீதம் விற்கவேண்டும். ஏஜண்டுகள் தேவைக்குரிய பிரதிகளுக்கு 18—10—49-க்குள் தெரிவித்துக்கொள்வதுடன், பிரதி ஒன்றுக்கு ரூ. 2—8—0 வீதம் முன்பணம் அனுப்பவேண்டும்.

சந்தாத் தோழர்களுக்கு:—"மாலை மணி" சந்தாதாரர்கள், தாங்கள் அனுப்பியுள்ள சந்தா தொகைக்குரிய பத்திரிகைகள் மட்டும், 20—10—49 முதல் அனுப்பப்படும். தொடர்ந்து குறிப்பிட்ட காலம் வரையில் பத்திரிகை அனுப்பப்படவேண்டுமானால், அதற்குரிய அதிகப்படியான தொகையை அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

—மானேஜர்.

திராவிட முன்னேற்றக்கழக துவக்க விழாக் கூட்டங்கள்

20-10-49

விருதாசலம் :— என். வி. நடராசன், ஏ. வி. பி. ஆசைத்தம்பி.

21-10-49

மன்னார்குடி:— ஈ. வெ. கி. சம்பத், இராமாமிர்தத் தம்மையார், எஸ். கே. சாமி

சென்னைமைலாப்பூர்:- இரா. நெடுஞ்செழியன். மா. இளஞ்செழியன்

செகுடந்தாளி:— ஜி. என. ராஜு

நாகர்கோவில்:— புலவர். கே. கோவிந்தன், இரெ. இளம்வழுதி, கி. மனோகரன்.

22-10-49

சிதம்பரம் — ஈ. வெ. கி. சம்பத், இராமாமிர்தத் தம்மையார், எஸ். கே. சாமி

ஆற்காடு :— காஞ்சி. கல்யாணசுந்தரம, கே. ஏ. மதியழகன்

ஆரணி:— சி. பி. சிற்றரசு, கே. ஏ. மதியழகன்

காவிரி தரும் பலன்

தஞ்சை வட்டாரத்தில் காவிரி இப்பொழுது 11,21,000 ஏககர் நிலத்திற்கு நீர்ப்பாசன வசதி அளிக்கிறது. இதில 1,84,047 ஏக்கர் நிலம இருபோக சாகுபடிககுரியவை. ஓர் ஆண்டில சராசரி 6,60,000 லட்சம டன அரிசி உற்பத்தி செய்யப் படுகிறது. இன்னுமோர் அணை அதில் கட்டினால், மற்றும் பல ஏக்கர் நிலங்களில் பயிர் விளையும்.

இனி நடப்பவை

சிதம்பரம்—திராவிட முன்னேற்றக்கழகம் சிதம்பரம் நகரக்கிளையின் துவககவிழாவும, பொதுககூட்டமும் 22-10-49 மாலையில் சிதமபரம் அண்ணாமலை டவுன் ஹாலில் நடைபெறும. அதுபோது தோழர் ஈ. வி. கே. சம்பத், மற்றும் பலர் சொற்பொழிவாற்றுவர்.

* * *

இலயூர்—இவ்வூரில்15-10 49ல் நடக்கயிருந்த இலவச நூல் நிலயத் திறப்புவிழா சில வசதிக்குறைவினல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. தேதி பின்னர் அறிவிக்கப்படும். எனத் தோழர் உலகிறைவனர் அறிவிக்கிறார்.

* * *

ஆரணி— திராவிட முன்னேற்றக் கழகம்—ஆரணிநகரக் கிளையின் ஆரம்பவிழாப் பொதுக்கூட்டம், குயப்பாளையம் பாஞ்சாலி மைதானத்தில் தோழர் ஆர். குட்டி அவர்கள் தலைமையில் 22-10-49 சனி மாலை 6-மணிக்கு நடைபெறும். அதுபோது தோழர்கள் சி. பி சிற்றரசு, புலவர் க. கோவிந்தன் பி. ஒ. எல், மற்றும் பலர் சொற்பொழிவாற்றுவர். அன்று மாலை 4-மணிக்குக கொடி ஊர்வலம்நடைபெறும்.

* * *

சென்னை ஒட்டேரி— சென்னை ஒட்டேரி பிரிக்லின் ரோடு 21-எண்ணுள்ள கழக மனையில், திராவிட முன்னேற்றக்கழகம் சென்னை நகர ஒட்டேரி உட்கிளையின் சார்பாக ஓர் பொதுக்கூட்டம் நடைபெறும. அதுபோது "திராவிடனுக்கு தீபாவளி திருநாளா?" என்பது பற்றித் தோழர்கள் புலவர் வே. த. அர்ச்சுனனர், பி. ஜகநாதன், எம. மூர்த்தி மறறும் பலர் சொற்பொழிவாறறுவர். கூட்டத்திற்குத் தோழர ஏ. கே. சாமி தலைமை வகிப்பார்.

* * *

சென்னை திருவல்லிக்கேணி— 19-10-49 புதன் இரவு 8 மணிகு திருவல்லிக்கேணி ஹைரோடில், 301-எண்ணுள்ள இல்லத்தில் திராவிட முன்னேற்றக் கழகம்—சென்னை நகர திருவல்லிக்கேணி உட்கிளையின் செயற்குழு (அவசரக்) கூட்டம் நடைபெறும். இதையே அழைப்பாக ஏற்று உறுப்பினர்கள் வருகைதரும்படித் தோழர் கா. சேவாதாரசன் (செயலாளர்) அழைக்கிறார்.

கொள்கையே பெரிதென...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

விட்ட காரணத்தால் எங்களால் அந்தத் தலைமையை ஒப்புக்கொள்ள முடியவில்லை என்றும், ஆகவேதான் விலகி வேறு கழகம் அமைத்து, ஆனால், அதே இலட்சியங் கொண்டு நாட்டுக்கு நல்லவை செய்யத் துணிந்துள்ளோம் என்றும் விரிவாகப் பேசினார்.

ராமசாமி

அடுத்து கரூர் நகரசபை உறுப்பினர் தோழர் இராமசாமி, திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றவேண்டியதன் அவசியத்தை உணர்த்தி, வடநாட்டின் பிடியிலிருந்து தப்பி சுயாட்சி கொள்ள திராவிடநாடு பிரிந்திருக்கவேண்டியது அவசியம் என்றும், ஆகவே கழக இலட்சியம் கைகூட எல்லோரும் கழகத்தில் உறுப்பினர்களாகி நாட்டிற்குத் தொண்டுபுரிய வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

எஸ். அப்பாவு

பின்னர் இளைஞர் தோழர் எஸ். அப்பாவு அவர்கள் பேசும்போது, திராவிடர் கழகத் தலைவரின் நகாச செயலின் காரணமாகவே, திராவிட முன்னேற்றக் கழகத்திலுள்ளோர் விலகிப்புதுக் கழகம் அமைக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டது என்றும், மோதுதலைத் தவிர்க்கவும், வீண் வேலையில் நேரத்தையும் நினைப்பையுஞ் செலவழித்து ஆக்க வேலைகள் பாழ்படாமல் பாதுகாத்துக்கொள்ளவும், பெரும்பான்மையினர் விலகவேண்டி நேரிட்டது என்றும், இலட்சியத்தை ஈடேற்ற நேரிய வழியில் நின்று திராவிட முன்னேற்றக் கழகம் பாடுபடும் என்றும், உரிமைப் போர்க் கிளர்ச்சியொன்று துவக்கப்போகிறோம் என்றும், எழுத்துரிமை, பேச்சுரிமை ஆகியவற்றைப் பறிக்கும் முறையில் அரசாங்கம் விதித்துள்ள அடக்குமுறைகளை எதிர்த்துப் போராட முடிவு செய்ய இருக்கிறோம் என்றும், உரிமை வேட்கைப் பெறுவதிலும், அதனை மற்றவர்களுக்கு ஊட்டுவதிலும் மாணவர்கள் பெரும்பங்கு கொள்ளவேண்டும் என்றும், பழமையையும், பாசிசத்தையும் ஒழிப்பதிலே திராவிட முன்னேற்றக் கழகம் முனைந்து நின்று வேலை செய்யப் போகிறது என்றும் தெளிவுபட விளக்கிக் கூறினார்.

இரா. நெடுஞ்செழியன்

பின்பு தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம் வருமாறு:— "திராவிட முன்னேற்றக் கழகத்தின் துவக்க விழாக் கூட்டங்கள், சென்னையிலிருந்து குமரி முனைவரையிலுமுள்ள பல்வேறு நகரங்களில், இதேபோது, இதே நேரத்தில், நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. கோவையிலே அண்ணா முழங்கிக்கொண்டிருப்பார். திருவனந்தபுரத்திலே அன்பழகனின் முழக்கம்—தூத்துக்குடியிலே கருணாநிதியும், காஞ்சி கல்யாணசுந்தரமும், வேலூரிலே சிற்றரசும், மதியழகனும், தஞ்சையிலே சம்பத்; திண்டுக்கல்லிலே எஸ். கே. சாமியும், தங்கப்பழமும் இப்படியே பல ஊர்களிலும் பலர். எல்லாம் திராவிட முன்னேற்றக் கழகம் துவக்கவேண்டியதன் அவசியம்பற்றிய பெரு முழக்கமாகவே இருக்கும்.

புதிய கழகத்தினர்

திராவிடர்கழகத்திலேஇருந்த நாங்கள் திராவிட முன்னேற்றக் கழக மேடையிலே காணப்படுகிறோம். கழகத்தில் மூன்று திங்கள் காலத்தில் ஏற்பட்ட பெரும் புயலும், அதனால் ஏற்பட்ட அதிர்ச்சியும், அந்த அதிர்ச்சி கொடுத்த விளைவுகளும் திராவிட முன்னேற்றக் கழகம் காணவேண்டிய இன்றியமையாத நிலையில் கொண்டுவந்து விட்டுவிட்டன.

பேச்சாளர்கள், எழுத்தாளர்கள், தொண்டர்கள், பாடுபடுவோர், பண்புடையோர், சிந்திக்கத் தெரிந்தோர், சிறப்புடையோர், மாணவர்கள், மதிப்புடையோர் அனைவரும் திராவிடமுன்னேற்றக் கழகத்திலே பெரும்பான்மையினராகக் காட்சியளிக்கிறார்கள். திராவிடர் கழகத்திலே காணப்பட்ட பலர் இங்கே இருக்கிறார்கள். கண்ணியத்தைக் கடைப்பிடிப்பவர்கள், பொதுநல நோக்குடையோர், சூது, வஞ்சகம், சூழ்ச்சி ஏதும் அறியாதார் அனைவரும் இங்கே உள்ளனர். இப்படிப்பட்ட பெரும்பான்மையினர் விலகி வருகிறார்களென்றால் அதற்கு எவ்வளவு அழுத்தமான உண்மைக் காரணம் இருக்கவேண்டும்; சிந்திக்கும் தன்மைவாய்ந்த பெரும்பான்மையினர் ஒரு முடிவு எடுக்கிறார்கள் என்றால், அதில் எவ்வளவு நீதி இருக்க வேண்டும்; பெரும்பான்மையோர் விலகுகிறார்கள் என்றால், எவ்வளவு நேர்மையும், கண்ணியமும் அதில் தொக்கியிருக்க வேண்டும்; என்பதைப் பொது மக்களாக உள்ள நீங்கள் சிந்தித்துப்பார்க்கவேண்டும்.

அண்ணாவைக் கண்டோம்

இந்நாட்டில் அரசியல் விடுதலை மட்டும் போதாது, சமுதாய விடுதலையும் வேண்டும்; அதிகாரம் கிடைத்தால்மட்டும் போதாது, அறியாமை அடியோடு அகலவேண்டும்; நாடு முன்னேற உடனடி சமுதாயப் புரட்சி தேவை என்ற ஒலி பள்ளிகளிலும், கல்லூரிகளிலும், பல்கலைக் கழகங்களிலும் எட்டிற்று. திராவிடம் உன்னுடையது, அதன் உரிமை உனக்கே உரியது என்று வரலாறு சான்று பகர்கிறது, திராவிடம் உன்னுடையதாக ஆக்கிக்கொண்டால், நீ திக்கெட்டும் புகழ்பரப்பி வாழலாம், என்ற ஒலிகள் ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்ந்து வந்து, பள்ளி மாணவர்களாகிய எங்கள் செவியில் விழக் கண்டோம். அதுவரையில் அம்மாதிரி ஒலி பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் மாணவர்கள் உள்ளத்திலே சென்று மோதியது கிடையாது. ஒலி மோதியவுடனே எதிரொலித்தது மாணவர் உலகு! ஒலிவந்த பக்கம் திரும்பிப் பார்த்தனர் என் போன்ற மாணவர்கள் அனைவரும், அக்காலங்களில். அங்கே அண்ணா நிற்பதைக் கண்டோம்.

கொள்கைக்காகவே கழகத்தில் சேர்ந்தோம்

அண்ணாவின் மூலம் பெரியார் சுட்டிக்காட்டப்பட்டார். கொள்கை சிறந்ததாகஇருந்தது. ஆகவே கொள்கையின் சின்னமாகக் காட்டப்பட்ட பெரியாரைத் தலைவரென ஏற்றுக்கொள்ள இசைந்தோம். கொள்கைக்காகவே, கொள்கையில் கொண்டிருந்த ஆர்வத்தின் காரணமாகவே, கொள்கை பரவி நாடும் மக்களும் வளம்பெற்று வாழ்வதைக் கண்டு மகிழவேண்டும் என்ற காரணத்துக்காகவே, கழகத்தில் தொண்டாற்றப் புகுந்தோம்.

கொள்கைக்காகத்தான்நாங்கள் கழகத்தில்சேர்ந்தோமேயொழிய அவருடைய 'திருக்கல்யாண' குணங்களுக்காக அல்ல. ஒரு கழகம் எந்த முறையில் இருக்க வேண்டுமோ அந்த முறையிலில்லாது, கழகம் ஒரு மனிதரின் சர்வாதிகாரப் பிடிவாதத் தன்மையில் செல்வதைக் கண்டு, மனம் நொந்தோம் எனினும் பொறுத்துக்கொண்டோம்; சகித்துக்கொண்டோம். தேவையான கருத்துக்களை எடுத்துக் கூற இந்தக் கழகத்தைத் தவிர வேறொன்று இல்லை என்ற காரணத்திற்காகவே, சர்வாதிகாரத்திற்கும், பிடிவாதத்திற்கும், பொறாமைக்கும், இப்படிப்பட்ட வேண்டாத குணங்கள் எல்லாவற்றிற்கும் பொறுத்துக்கொண்டிருந்தோம். கள்ளம், கவடு, சூது, சூழ்ச்சி, பொறாமை, வஞ்சகம், பித்தலாட்டம், பொய், புனைசுருட்டு ஏதும் அறியாத பள்ளிமாணவ மனநிலையோடுதான், ஆயிரக்கணக்காக மாணவர்களாகிய நாங்கள் கழகத்தில் சேர்ந்தோம், கொள்கையின் மீது கொண்டிருந்த ஒரே பற்றின் காரணமாக. அந்தப் பண்பு மாற வழியுமில்லை வகையுமில்லை.

கழகத்தில் நல்ல அமைப்பு, ஜனநாயக முறையில் ஏற்பட்டு, நாட்டிற்குப் பன்மடங்கு நல்ல செயல்கள் ஆற்றும் நிலைமை ஏற்படவேண்டும் என்று ஆர்வத்தால் துடிதுடிக்கும் போதெல்லாம், கழகத்திலிருந்த பெரியோர்கள், அவர் வயதானவர், சில ஆண்டுகள்தானே இருக்கப் போகிறார், அவர் இருக்கும் வரையில் அவரிஷ்டப்படி காரியம் ஆனால் சரி, பிறகு பார்த்துக் கொள்ளலாம் அமைப்புமுறை ஆகியவற்றை, என்றுதான் கூறி வந்தார்கள். வேறு எது எப்படிப் போனாலும் கொள்கை நிலைத்து நிற்கிறது, அதை வளர்க்கும் பணியிலே தொண்டாற்றுவோம், என்று மனதைத் தேற்றிக்கொண்டுதான் வேலை செய்துவந்தோம்.

கொள்கை பறக்கவிடப்பட்டது

இப்படிப்பட்ட நிலையில் கொள்கையைக் காற்றில் பறக்கவிட்டு, ஜனநாயக முறைக்கு மாறாக, சர்வாதிகாரத்தைக் கடைப்பிடித்து மணியம்மையைத் திருமணம் செய்துகொண்டார். வேண்டாம், கொள்கையைப் பாழாக்காதீர்கள், வாரிசு மூட நம்பிக்கை என்று சொல்லிய தாங்களே, 72-வது வயதில் 30-வது வயது மங்கையை-மகள் போல் பாவித்த பெண்ணை, மணமுடித்து வாரிசு ஏற்படுத்துகிறேன் என்று சொல்லி, ஒரு இழிந்த எடுத்துக்காட்டுக்கு இலக்கியமாக இருக்க வேண்டாம் என்று கெஞ்சினோம். கேட்கவில்லை! சாதிப் பெயர் கூடாது என்றுசொல்லி, அதற்கு எடுத்துக்காட்டாக விளங்கியவர், வேங்கடப்பநாயக்கர் மகன் ராமசாமிநாயக்கர் என்று போட்டுக்கொண்டார். இந்து என்றால் திருடன் என்று பொருள் கூறி, இந்து என்று சொல்லிக்கொள்ளவெட்கப்படு என்று கூறியவர், இந்து-பகுத்தறிவுவாதி என்று கூறிக்கொண்டார். வாரிசு மூட நம்பிக்கை என்று போதித்தவர் வாரிசு தேட முயன்றார். வாழ்க்கை இன்பத்தினை நுகரக்கூடிய பக்குவமற்ற நிலையில் பெருங்கிழவன் ஒரு சிறு பெண்ணை— மணமாகாத பெண்ணை வாரிசுக்காகவோ, தன் பாலடையின் ஜிழிருந்தபுாளவோ, குத்துவிளக்குபோல்வீட்டிலிருக்கவோ மணம் செய்துகொண்டால், அது பொருந்தா மணம், தடுக்கப்படவேண்டியமணம் என்றெல்லாம் கூறியவர் பொருந்தா மணம் செய்துகொண்டார். அதை ஒரு ஏற்பாடு என்கிறார். மணம் பெற வழியில்லாத ஒரு ஏற்பாட்டை எப்படித் திருமணம் என்று கூறுவது, அதுவும் அது எப்படிப் பொருந்தும் திருமணம் ஆகும். மணவாடை எங்கு இல்லையோ அது எப்படி மணம் ஆகும்; அதுவும் பொருந்தும் மணம் ஆகும். ஆகவேதான் அதைப் பொருந்தாமணம் என்கிறோம்.

காதல் மணத்திற்கே இதில் இடமில்லை என்கிறார் பெரியார். அதைப் பொருந்தும் மணம் என்று வாதிட்டு நிற்பவர்களின் தன்மையை என்னென்று கூறுவது.

நம்பிக்கை இல்லை என்றார் நம்பிக்கை இழந்தோம்

தவறு செய்பவர் தலைவரேயானாலும், தவறைச் சுட்டிக்காட்டத் தவறமாட்டோம், கொள்கையே — ஜனநாயக முறையே — எதிர்கால இயக்க வாழ்வே—சர்வாதிகாரத் தலைவரால் காற்றில் பறக்கவிடப் படும்போது, கண்மூடி முட்டாள்களாக இருக்க சம்மதிக்க மாட்டோம் என்பதை உணர்த்தப் பெரும்பான்மையோராகிய நாம் பெரியாரின் போக்குக்கு மாறுபட்டோம். மணியம்மையைத் தவிர இயக்கத்தை நடத்திச்செல்ல, தனக்கும் இயக்கத்துக்கும் வாரிசாக வேறு யாரும் இயக்கத்தில் இல்லை, வேறு யார் மீதும் நம்பிக்கையில்லை என்று சொல்லிய பிறகுதான், பொறுத்துக்கொண்டிருந்த நாம் இத்தகைய இழி சொல்லை வாங்கிக்கொண்டு இனியும் பொறுக்க முடியாது என்று, நம்முடைய கருத்தை—அவர்மீது நம்பிக்கையில்லை என்பதைத் தெரிவிக்கத் தொடங்கினோம். அவர் தலைவராகவே இருக்க விரும்புவாரானால் இன்னின்ன நிபந்தனைகளுக்கு உட்படவேண்டும் என்று கூறினோம்.

கண்மூடி முட்டாள்களாகப் பெரும்பாலோர் இருக்கமறுத்துவிட்டார்கள் என்பதைஉணர்ந்த உடனே நம்மையெல்லாம்—அவர் திருமணப் போக்கைக் கண்டித்தவர்களையெல்லாம் — கெஞ்சிக் கேட்டவர்களையெல்லாம் சூழ்ச்சிக்காரர்கள்—கொலைகாரர்கள் — துரோகிகள் — பதவிப் பித்தர்கள்—அப்பாவிகள்—ஆட்டு மந்தைகள் என்றெல்லாம் ஏமாற்றத்தின் விளைவாக ஏதேதோ சொல்ல ஆரம்பித்துவிட்டார்.

காலம் பதில் சொல்லும்

பொதுவாழ்வில் யார் சூழ்ச்சிக்காரராய் — பொறாமைக்காரராய் — சதிகாரராய் — பணத்துக்காக எதையும் செய்பவராய்—பணத்துக்காகக் கொள்கையை விட்டோடிபணக்காரரை அண்டி நிற்பவராய்-கொள்கையை விடப் பணமே பெரிதென்று கருதுபவராய் இருந்துவருகிறார்கள் என்பதை வருங்காலம் உலகம் நிச்சயம் தெள்ளத்தெளிய அறியத்தான் போகிறது. இப்பொழுதும் அறிந்துகொண்டுதான் வருகிறது.

கண்ணியத்தோடு வெளியேறினோம்

வீண் மோதுதலைத் தவிர்த்து கண்ணியத்திற்காக நாங்கள் வெளியேறினோம். நாங்கள்தான் வெளியேறினோமே யொழிய அவர்களால் விரட்ட முடியாது; முடியவில்லை. மூன்றுமாத காலமாக கழகத்தில் இருந்துகொண்டுதான் மாறுபட்டக் கருத்தைத் தெரிவித்தோம். அவர்களால் எங்களை முறைப்படி, சட்டப்படி, கட்டுப்பாடுபடி வெளியேற்ற முடியவில்லை. காரணம் ஆதரவாளர்கள் சிறுபான்மையினர்; நாங்கள் பெரும்பான்மையினர்; எனவேதான் கண்ணியத்தோடு வெளியேறினோம்.

இலட்சியத்தில் முன்னேறினோம்

சர்வாதிகாரத் தன்மையிலிருந்து ஜனநாயக முறைக்கு முன்னேறி இருக்கிறோம்; கண்மூடித்தன்மையில் இருக்க மறுத்து விழிப்புள்ள நிலைக்கு முன்னேறியிருக்கிறோம்; முட்டாள்களாக இருக்க ஒப்பாமல் சிந்தனைச் சிற்பிகளாக விளங்க முன்னேறியிருக்கிறோம்; அமைப்பற்ற முறையிலிருந்து அமைப்போடு கூடிய நிலைக்கு முன்னேறியிருக்கிறோம். திராவிடர் கழகத்தின் இலட்சியத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறோமே யொழிய, அதனுடைய அமைப்பு முறையையோ, திட்டங்களையோ அல்ல.

நாட்டிற்கு நல்லது செய்வோம்

அரசியலில் வடநாட்டுப் பாசிசத்தை அழித்து நாட்டுப் பிரிவினையை ஏற்படுத்துவதும், பொருளாதாரத்தில் வடநாட்டுச் சுரண்டல், முதலாளித்வம் ஆகியவற்றை ஒழித்து சக்திக்கேற்ற உழைப்பு தேவைக்கேற்ற வசதியை ஏற்படுத்துவதும், சமுதாயத்தில் பேதங்களை ஒழித்து மனிதனை மனிதன் என்று மதிக்கும் மனப்பான்மையை யாவர்க்கும் உண்டாக்கவும் திராவிட முன்னேற்றக் கழகம் பாடுபடும். உரிமைக் கிளர்ச்சிகளை நடத்தி நாட்டிற்கு நலம் பயந்து வெற்றி பெறும் என்பது உறுதி"

தொடர்ந்து பேசும்போது தோழர் இரா. நெடுஞ்செழியன் காங்கிரஸ் அரசாங்கத்தின் திட்டமற்றத் தன்மையையும், வெளிப்பகட்டு முறையையும் தெளிவாக விளக்கி, அது கையாண்டுவரும் அடக்குமுறைகளைக் கண்டித்து விரிவாகப் பேசினார்.

கூட்டத்தில் பெரியாரின் ஆதரவாளர்கள் கேட்ட சுமார் இருபதுக்கு மேற்பட்ட அபத்தமான கேள்விகளுக்குத் தெளிவான முறையில் ஆணித்தரமாகப் பதிலிறுத்தார்.

நன்றிகூறக் கூட்டம் இரவு 9-மணிக்கு மிக உற்சாகத்தோடு இனிது கலைந்தது. மாணவர்களும், இளைஞர்களும், தொழிலாளர்களும் காட்டிய ஆர்வம் மிகவும் பாராட்டத்தக்கதாக இருந்தது. (ந-கி)

ஏஜெண்டுகள் தேவை

கீழ்க்கண்ட ஊர்களுக்கு 'மாலைமணி' விற்பனை செய்ய முன்பணம் கட்டக்கூடிய ஏஜெண்டுகள் தேவை.

பாப்பாநாடு, கரூர், தேனி, வேலூர், நன்னிலம், ஜோலார்பேட்டை, பரங்கிப்பேட்டை.

அறிவிப்பு

ரெடிஜ முட்டை பவுடர், முட்டைப்பூச்சி, எறும்பு முதலியவைகளை நாசமாக்கி அயர்ந்த நித்திரை தருகிறது. சாம்பிள் டின் 1-க்கு 8 அணா ஸ்டாம்பு அனுப்பவும். G. மருவியப்ப முதலியார், மதுரை.

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Mutkumari Chetty Street, Madras-1.